## September 8, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஜப்பான் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்வதாக ஷிகெரு இஷிபா தெரிவித்தார். கடந்த ஜூலையில் நடைபெற்ற அந்நாட்டு நாடாளுமன்ற மேலவைத் தேர்தலில், ஆளும் லிபரல் ஜனநாயக கட்சி கூட்டணி சந்தித்த பின்னடைவுக்குப் பொறுப்பேற்று, அவர் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று அவரின் சொந்தக்கட்சியினரே அழுத்தம் அளித்து வந்த நிலையில், இந்த முடிவை அவர் எடுத்துள்ளார்.
   i. கடந்த ஜூலையில் 248 இடங்களைக் கொண்ட ஜப்பான் நாடாளுமன்ற மேலவைத் தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பான் மைக்குத் தேவையான 125 இடங்களைவிட மூன்று இடங்கள் குறைவாக 122 இடங்களில் மட்டுமே ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியும், அதன் கூட்டணிக் கட்சியான கோமெய்டோவும் வெற்றி பெற்றன.
   ii. இதைத் தொடர்ந்து நாடாளு மன்றத்தில் இஷிபா தலைமையிலான ஆளும் கூட்டணி பெரும்பான்மையை இழந்தது.
   iii. கடந்த ஆண்டு அக்டோபரில் பிரதமராகப் பதவியேற்ற இஷிபா, 11 மாதங்களில் பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார். அவரின் கட்சிக்குப் புதிய தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் அக்டோபர் தொடக்கத்தில் நடைபெற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அக்கட்சிக்குத் தலைவராகப் பொறுப்பேற்பவரே, பிரதமராகவும் பதவி வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.
2. இஸ்ரேல் நிதியமைச்சர் பெசலேல் ஸ்மோட்ரிக் திங்கள்கிழமை (செப். 8) முதல் புதன்கிழமை வரை 3 நாள்கள் பயணமாக இந்தியா வருகிறார். இந்தப் பயணத்தின் போது, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்,வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் கட்டர் ஆகியோரை அவர் சந்திக்கவுள்ளார். மேலும், மும்பை மற்றும் காந்திநகரில் உள்ள கிஃப்ட் சிட்டிக்கும் அவர் செல்லவுள்ளார்.
   i. இந்தியாவுடன் இஸ்ரேலின் பொருளாதார மற்றும் நிதி உறவுகளை ஆழப்படுத்துவதும், இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் (பிஐடி) மற்றும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (எஃப்டிஏ) போன்றமுக்கிய ஒப்பந்தங்கள் குறித்து தீர்வு எட்டப்படுவதும் இந்தப் பயணத்தின் நோக்கம் ஆகும்' என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
   ii. உத்திசார் கூட்டாளிகளான இந்தியா, இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆண்டுக்கு சுமார் 400 கோடி டாலராக உள்ளது. 2000- ஆம் ஆண்டுமுதல் கடந்த ஏப்ரல் வரை, இந்தியாவில் இருந்து இஸ்ரேலுக்குத் திரட்டப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 44.3 கோடி டாலர் ஆகும். அதே காலகட்டத்தில் இஸ்ரேலில் இருந்து இந்தியாவுக்கு வந்த அந்நிய நேரடி முதலீடு 33.42 கோடி டாலர் ஆகும்.
3. அமெரிக்காவில் நடைபெறும் கிராண்ட்ஸ்லாம் போட்டியான யுஎஸ் ஓபன் டென்னிஸில், மகளிர் ஒற்றையர் பிரிவில்ல் நடப்பு நடப்பு சாம்பியனான பெலாரஸின் அரினா சபேலென்கா, கோப்பையைத் தக்கவைத்துக் கொண்டார்.

   i. இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீராங்கனையான சபலென்கா 6-3, 7-6 (7/3) என்ற நேர் செட்களில், போட்டித்த ரவரிசையில் 8-ஆம் இடத்திலிருந்த உள் நாட்டு வீராங்கனையான அமாண்டா அனிசிமோவாவை தோற்கடித்தார்.

4. இத்தாலியில் நடைபெற்ற எஃப்1 கார் பந்தயத்தில், நெதர்லாந்து வீரரும், ரெட் புல் டிரைவருமான மேக்ஸ் வெர்ஸ் டாபென் வெற்றி பெற்றார். நடப்பு சீசனில் இது அவரின் 3-ஆவது வெற்றியாக இருக்க, கடந்த மே மாதத்துக்குப் பிறகு அவரின் முதல் வெற்றியாகும். முன்னதாக போல் ரேஸில் வெர்ஸ் டாபென் ஒரு லாப்பை 1 நிமிஷம். 18.792 விநாடிகளில் கடந்து, 'லாப் சாதனை' படைத்தது குறிப்பிடத்தக்கது.

5. செங்கடலில் உள்ள ஆழ்கடல் இணைய கேபிள்கள் துண்டிக்கப்பட்டதால், இந்தியா உள்பட ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் சிலபகுதிகளில் இணைய சேவை பாதிக்கப்பட்டது.
   i. இஸ்ரேல் - ஹமாஸ் மோதலை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக, யேமன் நாட்டின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் கப்பல்கள் மீது தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.
   ii. இணைய சேவைகளைக் கண்காணிக்கும் நெட்பிளாக்ஸ் நிறுவனம், 'செங்கடலில் ஏற்பட்ட தொடர் ஆழ்கடல் கேபிள் துண்டிப்புகளால், இந்தியா, பாகிஸ்தான் உள்பட பல நாடுகளில் இணைய இணைப்பு வேகம் குறைந்துள்ளது. சவூதி அரேபியாவின் ஜெட்டா நகருக்கு அருகே உள்ள 'எஸ்.எம்.ட பிள்யூ.4' மற்றும் 'ஐ.எம்.இ. டபிள்யு.இ. கேபிள் அமைப்புகளில் ஏற்பட்ட கோளாறுகளே இதற்குக் காரணம்' என்று தெரிவித்துள்ளது.
   iii. இந்திய நிறுவனமான டாடா கம்யூனிகேஷன்ஸ், தென்கிழக்கு ஆசியா-மத்திய கிழக்கு-மேற்கு ஐரோப்பா4 (எஸ்.எம்.டபிள்யூ.4) கேபிளை இயக்குகிறது. மற்றொரு சர்வதேச குழுமமான அல்காடெல்-லூசென்ட் நிறுவனத்தால் ஐ.எம்.இ.டபிள்யு.இ. கேபிள் நிர்வகிக்கப்படுகிறது. கேபிள் துண்டிப்பு குறித்து இவ்விரு நிறுவனங்களும் இதுவரை எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை

6. தென் கொரியாவில் நடைபெறும் வில்வித்தை உலக சாம்பியன்ஷிப்பில் காம்பவுண்ட் பிரிவில் இந்திய ஆடவர் அணி தங்கப் பதக்கம் வென்றது. போட்டியின் வரலாற்றில் இந்திய ஆடவர் அணி தங்கம் வென்றது இதுவே முதல்முறையாகும்.
   i. காம்பவுண்ட் ஆடவர் அணி இறுதிச்சுற்றில், ரிஷப் யாதவ், அமன் சைனி, பிரதமேஷ் ஃபுகே ஆகியோர் அடங்கிய இந்திய அணி 235-233 என்ற புள்ளிகள் கணக்கில் நிகோலஸ் கிரார்ட், ஜீன் ஃபிலிப் பௌல்ச், ஃபிரான்கோய்ஸ் டுபோய்ஸ் அடங்கிய பிரான்ஸ் அணியை வீழ்த்தி தங்கம் வென்றது.

7. இசை மேதை பாரத ரத்னா பூபேன் ஹசாரிகாவின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை அசாம் அரசு ஆண்டு முழுவதும் கொண்டாடத் தொடங்கிய நிலையில், பிரதமர் நரேந்திர மோடியும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

8. ஜிஎஸ்டியில் செய்யப்பட்டுள்ள மாற்றத்தைத் தொடர்ந்து, பொருள்களின் விலை குறைக்கப்படவில்லை என்று மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்துக்கு (சிபி ஐசி) புகார்கள் வந்தால், அது குறித்து தொழில் துறை அமைப்புகளின்

*கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்று சிபிஜசி தலைவர் சஞ்சய்குமார் அகர்வால் தெரிவித்தார்.*

i. *375 பொருள்கள் மீதான ஜிஎஸ்டியை குறைக்கவும், 4 விகிதங்களாக விதிக்கப்பட்ட ஜிஎஸ்டியை 2 விகிதங்களாக குறைக்கவும் கடந்த வாரம் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.*